செய்தி வெளியீடு எண்.411 நாள்: 8.7.2021

<u>செய்தி வெளியீடு</u>

**<u>ஏ.டி.எம். கொள்ளை முயற்சியைத் தடுக்கும் போது, கொள்ளையர்களால் தாக்கப்பட்டு உயிரிழந்த திருவாரூர் மாவட்டம், கீழக்கூத்தங்குடி கூடூரைச் சேர்ந்த தமிழரசன் என்பவரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாய் நிதியுதவி</u>**

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு</u>**

திருவாரூர் மாவட்டம், கீழகூத்தங்குடி, கூடூரில் வசித்து வந்த தமிழரசன் என்பவர் சமீபத்தில், கூடூர் பாரத மாநில வங்கி ஏ.டி.எம் கொள்ளை முயற்சியைத் தடுக்கச் சென்றதில் கொள்ளையர்களால் தாக்கப்பட்டு உயிரிழந்தார். இந்தச் செய்தியை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், அவரது குடும்பத்தார்க்கு தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட சம்பவத்தில் உயிரிழந்த தமிழரசன் குடும்பத்திற்கு, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 5 இலட்சம் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**